
THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

**ஏப்ரல்**
**2005**

ஆசிரியர்
B.அர்ஜுனன்

மரம் 5 கனி 5

## கிறிஸ்துவின் வசன மாத இதழின் பதினெட்டாவது
## வாசகர் கருத்தரங்கு

*வாசகர்களுக்கு,*

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தநாமத்தில் வாழ்த்துக்கள். இக்கருத்தரங்கிற்கு தேனி மற்றும் அண்டை மாவட்டத்து வாசகர்களை அன்புடன் அழைக்கின்றோம். அனுமதி இலவசம்.

**நோக்கம் :** ☆ 1992முதல்2004 வரை வெளிவந்த இதழைக் குறித்த ஓர் ஆய்வு

☆ பதினெட்டாவது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை

☆ எதிர் காலத்தில் நமது இதழின் இலக்கு

**நாள் :** ஏப்ரல் 30 - ம் தேதி சனிக்கிழமை, காலை 10.00 மணி

**இடம் :** கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்,ஒண்டிவீரன் நகர், அல்லி நகரம்
தேனி - 625 531

*கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்*
சகோ . செல்வராஜ்

*வாருங்கள்!* *பங்குபெறுங்கள்!!* *அறிந்து கொள்ளுங்கள்!!!*

**வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்-சங்-120:2**

## கணவன் மனைவிக்குள்ளே இருக்கவேண்டிய தீர்மானங்கள்

- புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும், விட்டு தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருக்க தீர்மானிக்க வேண்டும். [மத்.19:6; எபே.5:25,28,31]
- மனைவிகள் தங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படிய தீர்மானிக்க வேண்டும்.[1பேது.3:6; எபே.5:21,22,24; கொலோ.3:18,19]
- புருஷன் மனைவிக்குத் தலையாயிருக்கத் தீர்மானிக்க வேண்டும். [எபே.5:23]
- புருஷன் மனைவிக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்ய தீர்மானிக்க வேண்டும். [1பேது.3:7]
- புருஷர்கள் தங்கள் மனைவிகளில் அன்புகூரத் தீர்மானிக்க வேண்டும். [கொலோ.3:19; எபே.5:25]



*P.அலிஸ்மேரியம்மாள்*

**கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் (ரோமர்16:16)**

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
# THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

*மரம் - 5*    *ஏப்ரல் - 2005*    *கனி - 5*

ஆசிரியருரை

## எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது

### Our sufficiency is of God



இன்றைய உலகம் தகுதியை குறித்து பேசிக்கொண்டிருக்கிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்ட அப்போஸ்தலனாகிய பவுல் இதைக்குறித்து பேசும் போது "எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது. புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த உடன்படிக்கை எழுத்துக்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது"(2கொரி.3:5,6). தான் ஒரு அப்போஸ்தலனாக இருந்தபோதிலும், எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது என்கிறான். இன்றைக்கு தகுதிக்காக போராடுகிற ஒரு கூட்டத்தை நாம் பார்க்க முடிகிறது. என் தகுதி என்னாவது? என்னைக்குறித்து மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்? என்றெல்லாம் சொல்லி, தான் என்ற ஆனவத்தோடு, தான் செய்ய நினைத்ததை நிலைநாட்ட முயற்சிப்பார்கள்.

ஆனால் தேவன் சபையை அவருடைய சித்தத்தின்படி செயல்படுத்துகிறார். "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவிதமான பாஷைகளையும் ஏற்படுத்தினார். எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா? எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவர்களா? எல்லாரும் அந்நிய பாஷைகளைப்

பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா? இப்படியிருக்க முக்கியமான வரங்களை நாடுங்கள்; இன்னும் அதிகமேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்"(1கொரி.12:28-31) என்று பவுல் கொரிந்து சபைக்கு எழுதுகிறான். தேவனானவர் முதலாவது சபையை கிறிஸ்துவின் மூலமாக ஸ்தாபித்து அதிலே இருக்கவேண்டியவர்களைத் தகுதிப்படுத்தினார். ஆகவே சபையானது தேவ திட்டத்தின்படியும் அவருடைய திருச்சித்தத்தின்படியும் முதல் நூற்றாண்டிலே ஆரம்பிக்கப்பட்டது. அந்த திருச்சபையானது இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை மட்டும் வெற்றிநடைபோடும்.

தேவனால் ஏற்படுத்தப்பட்ட கிறிஸ்துவின் சபையிலே தகுதியுடையோர் தகுதியற்றோர் என்ற நிலை இல்லை. ஏனென்றால், "சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார்"(1கொரி.12:25). நம்முடைய தேவன் பட்சபாதமுள்ளவரல்ல. எல்லாருக்கும் சம்பூரணமான ஆசீர்வாதங்களையும் அருளிச்செய்கிறவர். அவர் ஒருவரையும் புறம்பே தள்ளாதவர். சபையிலே கனக் குறைவாயிருக்கிறவர்களுக்கு அதிக கனத்தைக் கொடுக்கிறார். ஊழியர்(போதகர்)என்றால் சபையிலே மேன்மையானவர் என்றல்ல. ஊழியக்காரன் என்றால் பணிவிடைக்காரன் என்று பொருள். "உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மத்.20:27,28).

பல வேலைகளை செய்து கொண்டு வந்த அப்போஸ்தலர்களை அழைத்து தம்முடைய திருப்பணி வேலைகளை செய்யும்படி கர்த்தர் கட்டளையிட்டார். அவர்கள் புறப்பட்டு ஒருவரையும் வேலை கொள்ளாமல் உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை அறிவித்தனர். "அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்கக்கடவன் "(1கொரி.7:20) என்ற வசனத்தின்படி நிலைத்திருந்து சுவிசேஷ வசனத்தை அறிவித்தனர். தங்களுடைய சுய கருத்துக்களையோ சுய விருப்பத்தையோ அவர்கள் நிலைநாட்ட முயற்சிக்கவில்லை.

முதல் நூற்றாண்டு சபையிலே பணிபுரிந்து வந்த பேதுருவும் யோவானும் ஒரு முறை தேவாலயத்துக்குப் போகும்போது ஒரு சப்பாணியை கண்டார்கள். அவன் தங்களிடத்தில் பிச்சை கேட்கும்போது பேதுரு அவனை நோக்கி: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்;

நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி; வலது கையினால் அவனைப் பிடித்து தூக்கிவிட்டான்; உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது. அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்; இதைக் கண்ட ஜனங்கள் ஆச்சரியப்பட்டு பிரமித்தார்கள். "பேதுரு அதைக் கண்டு ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது, இவனை நடக்கப் பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப்பார்க்கிறதென்ன?.... அவருடைய நாமத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது. அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது" (அப்.3:12-16) என்றான். இவ்வளவு பெரிய அற்புதத்தை செய்த பேதுரு தன்னுடைய பக்தியையோ அல்லது தன்னுடைய பெலத்தையோ பெருமையாக சொல்லவில்லை கர்த்தருடைய நாமமே இதை செய்தது என்றான். இவர்களை பெலப்படுதினவரும் தகுதிப்படுத்தினவரும் தேவனே.

இயேசுவின் பிறப்பின்போது "மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள். தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்தஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும். இதோ, உனக்கு இனத்தாளாயிருக்கிற எலிசபெத்தும் தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள்; மலடி யென்னப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம். தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை என்றான்" (லூக்.1:34-37). இது எப்படியாகும் என்று கேட்ட மரியாளை தகுதிப்படுத்தினார். அந்தப்படியே முதிர்வயதிலே இருந்த எலிசபெத் யோவான்ஸ்நானகனை பெற்றெடுத்தாள். ஆம் மனிதனால் கூடாதவைகள் தேவனால் கூடும். இவர்களுடைய தகுதி தேவனாலே உண்டாயிருக்கிறது.

ஆடு மேய்ப்பனாக இருந்து ராஜாவாகிய தாவீதுடைய தகுதியும் தேவனாலே உண்டாயிருந்தது. தாவீது ஒரு முறை கோலியாத் என்ற பெலிஸ்தனை நோக்கி: நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய், நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்" (1சாமு.17:45) என்று சொல்லி அவனை வீழ்த்தினான். பாருங்கள் வெற்றி கர்த்தருடைய நாமத்திலே உள்ளது.

பவுல் செய்த அற்புதத்தைக் ஜனங்கள் கண்டு தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கிவந்திருக்கிறார்கள். பவுலை மெர்க்கூரி என்றும் பர்னபாவை யூப்பித்தர் என்றும் சொல்லி

பூமாலைகளையும் எருதுகளையும் கொண்டுவந்து, அவர்களுக்குப் பலியிட மனதாயிருந்தார்கள். அவர்களோ "மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போலப் பாடுள்ள மனுஷர்தானே;"(அப்.14:15) என்றனர். அவர்களுடைய அறியாமையை பவுலும் பர்னபாவும் ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம் என்றார்கள். பவுலும் பர்னபாவும் தேவனையே மகிமைப்படுத்த விரும்பினர். தங்களுடைய யோசனையையும் அவர்களுக்குச் சொல்லவில்லை. தங்களுக்கு ஜனங்கள் கொண்டு வந்த புகழ்ச்சியையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

இன்றைக்கு பூமாலை இல்லாத ஒரு நிகழ்ச்சியே இல்லை என்றே சொல்லலாம். தேவன் ஒருவரே கனத்திற்கு பாத்திரராயிருக்கிறார். அவர் ஒருவரே பெரியவர். சில வேளைகளில் நாம் சோர்ந்து போய் தேவன் எங்கே நம்மை பெலப்படுத்துகிறார் என்று சொல்லி சலித்துக்கொள்கிறோம். எலியா என்ற தீர்க்கதரிசி கூட அப்படித்தான் சோர்ந்துபோய் தான் சாகவேண்டும் என்று விரும்பினான். "போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும், நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி, ஒரு சூரைச்செடியின் கீழ்ப்படுத்துக் கொண்டு நித்திரை பண்ணினான்; அப்பொழுது ஒரு தூதன் அவனைத் தட்டியெழுப்பி; எழுந்திருந்து போஜனம் பண்ணு என்றான். அவன் விழித்துப் பார்க்கிறபோது இதோ,தழலில் சுடப்பட்ட அடையும், ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் அவன் தலைமாட்டில் இருந்தது; அப்பொழுது அவன்,புசித்துக் குடித்துத் திரும்பப்படுத்துக் கொண்டான். கர்த்தருடைய தூதன் திரும்ப இரண்டாந்தரம் வந்து அவனைத் தட்டியெழுப்பி; எழுந்திருந்துபோஜனபண்ணு; நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்றான். அப்பொழுது அவன் எழுந்திருந்து புசித்துக் குடித்து, அந்தப் போஜனத்தின் பலத்தினால் நாற்பது நாள் இரவு பகல் ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதமட்டும் நடந்துபோனான்"(1இரா.19:4-8). சாவை விரும்பின எலியாவை கர்த்தர் தம்முடைய தூதன் மூலம் போஷித்து பெலப்படுத்தி அனுப்பவேண்டிய இடத்துக்கு அனுப்பினார். அதைப் போல தேவன் உங்களைக் கொண்டு என்ன செய்ய சித்தமாயிருக்கிறரோ அதுவே நடந்தேறும். உங்களால் ஒன்றும் ஆகாது. உங்களுடைய தகுதியும் உங்களால் உண்டானதல்ல, அது தேவனாலே உண்டாயிருக்கிறது. ஆகையால் உங்களை முழுமையாக ஆண்டவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுங்கள்.

# வாசல்களைத் திறவுங்கள்

## Open Doors

*J.C.Choate*



சென்ற மாத தொடர்ச்சி.....

எனது சொந்த அனுபவத்தைப் பொறுத்த மட்டில் என்னுடைய குடும்பமும் நானும் பலவருடங்களுக்கு முன்பாகவே இந்தியா வர விருப்பப்பட்டோம். நாங்கள் விசா பெறும்படிக்கு பல முறை முயற்சித்தோம் ஆனால் பெற முடியவில்லை. நாங்கள் முயற்சியை கைவிட்டிருந்திருக்கலாம் ஆனால் நாங்கள் விடவில்லை. மாறாக நாங்கள் பல வருடங்களாக பாகிஸ்தான் சென்றோம், மீண்டும் இந்தியா வர முயற்சித்தோம் ஆனால் ஸ்ரீலங்கா வழியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டோம். கடைசியாக நாங்கள் இந்தியாவிற்குள் நுழைந்தோம். தொடர்ச்சியான விசா பிரச்சனையின் காரணமாக இரண்டு வருடங்களுக்கு நாங்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டியவர்களாயிருந்தோம். அந்த சமயத்தில் ஸ்ரீலங்காவில் வானொலி நிலையம் துவங்கப்பட்டது. இந்தியாவிற்கெனவும், ஆசியாவிற்கெனவும், பலமொழிகளில் வானொலி நிகழ்ச்சியை ஒலிபரப்பும்படியான சந்தர்ப்பத்தை நாங்கள் நழுவ விடவில்லை. மேலும், நாங்கள் இலக்கியத்தை பலமொழிகளில் (வேதாகம அஞ்சல்வழி பாடத்திட்டங்கள், மாத இதழ்கள், துண்டுப்பிரதிகள், மற்றும் புத்தகங்கள்) அச்சிட்டு பிரசுரிக்கும்படிக்கு ஒரு மாபெரும் முயற்சி மேற்கொண்டோம். இலக்கியத்தின் வாயிலாகவும், வானொலி வாயிலாகவும் நேபாளம், சிங்கப்பூர், கிழக்குமலேசியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், மியான்மர், மற்றும் ஆசியா, ஆப்பிரிக்காவிலுள்ள நாடுகளிலும் உலக முழுவதிலும் ஊழியம் செய்யும்படிக்கு இது வழி நடத்தியது. இன்று இந்தியாவிலேயே தொலைக்காட்சி ஒலிபரப்புகிறதான டி.வி. நிகழ்ச்சி மூலம் சுவிசேஷம் பரவுவதற்கான வாசல் திறக்கப்பட்டுள்ளது! மற்றபடி தேவன் வாசல்களைத்திறந்தார், நாங்கள் அதன் வழியாக மற்ற வாசல்களை கண்டடையும்படி சென்றோம். கர்த்தருடைய ஊழியத்தை விரிவாக்கும்படியான வாசல்கள் திறக்க காத்திருப்பீர்கள் என்றால் உங்களுக்கும் எங்களுக்கும் எவ்விதமான வாசல்கள் திறக்கப்பட்டிருக்கும் என்பதை அவர் அறிவார்.

என்னுடைய குடும்பமும் நானும் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கும் கர்த்தருடைய சபையை ஸ்தாபிப்பதற்கும் பல லட்ச மக்களை கொண்ட பட்டணங்களில் நுழைந்திருக்கிறோம். நாங்கள்

அங்கு சென்றபோது ஒரு ஆத்துமாவைக்கூட அறியவில்லை, ஆனால் நாங்கள் அங்கே இருந்தோம், மேலும் நாங்கள் கர்த்தர் எங்களோடிருந்தார் எனவும் அங்கு ஊழியஞ்செய்ய எங்களுக்கு அருளப்பட்டது என்பதையும் அறிந்துகொண்டோம். முதல் ஞாயிறு நாங்கள் எங்களுடைய ஹோட்டல் அறையிலேயே தேவனை ஆராதிக்கவேண்டியவர்களாயிருந்தோம், பின்பு ஒரு வாடகை வீட்டில் அல்லது எங்கெல்லாம் நாங்கள் சென்றோமோ அங்கெல்லாம் ஆராதனை செய்தோம். வழக்கமான அந்த ஞாயிற்று கிழமையில் எங்களோடு ஆராதனை செய்யும்படி யாரோ ஒருவரை கண்டுபிடித்துக்கொண்டோம், அதை நாங்கள் தொடர்ச்சியாகச் செய்கையில், நாங்கள் அநேகம் அநேகம் பேர்களை எங்களோடு வேத ஆராய்ச்சி செய்யும்படி கண்டுபிடித்தோம்! சீக்கிரமாய் அங்கே மனந்திரும்புதல்கள் நடைபெற்றது. நான் மதசம்பந்தப்பட்ட புத்தக சாலைகளையும், வேதாகம சங்கங்களையும், சமயக் கூட்டங்களையும் கூட (ஒருமித்துப்போக அல்ல, தொடர்பு ஏற்படுத்தி நாங்கள் இருக்குமிடத்தினை ஜனங்கள் அறிந்து கொள்ளும்படிக்கு), சந்தித்தேன், கைப்பிரதிகளையும் அழைப்பு அட்டைகளையும் அச்சிட்டு கடைகளில் இருப்பவர்களுக்கும், சந்தையிலும் அல்லது யாரையெல்லாம் நாங்கள் சந்திக்கிறோமோ அவர்களையும் எங்களுடைய கூட்டங்களிலும் தேவனுடைய வார்த்தையை ஆராய்ச்சி செய்ய கலந்து கொள்ளும்படி அழைத்தோம். நான் நம்முடைய அஞ்சல் வழி பாடத்திட்டத்தினை செய்தித்தாளில் விளம்பரப்படுத்தினேன். மேலும் எங்கெல்லாம் வாய்ப்புண்டோ, அங்கு நான் விரைந்து உபதேசித்து உள்ளூர் செய்திதாட்களிலும் விளம்பரப்படுத்தினேன். இதன் விளைவாக ஜனங்களோடு அறிமுகமானோம், கூட்டங்களுக்கு அவர்களை அழைத்தோம், அவர்களுடைய வீடுகளில் வேதாகம வகுப்புகளை ஏற்படுத்தினோம், அவர்களில் அதிகமானோர் மனந்திரும்பினார்கள், கற்பிக்கவும் போதிக்கவும் சிலருக்கு கற்றுக்கொடுத்து பயிற்சியளித்தோம், இன்றோ வானொலி நிகழ்ச்சியிலும், இந்திய தொலைக்காட்சி நிலையங்களிலும் மேலும் ஆசியாவின் மற்ற நாடுகளிலும் சுவிசேஷத்தை அறிவிக்கிற மூப்பர்களையும் பிரசங்கியார்களையும் நாங்கள் பெற்றிருக்கிறோம். இது நாங்கள் செய்ததை நொடிப்பொழுதில் வெளிப்படுத்துகிறது. யாரெல்லாம் திறந்த வாசல்கள் வழியாகச் செல்ல ஆயத்தமாயிருக் கிறார்களோ அவர்களோடு கூட எங்களால் தொடர்ந்து பணியாற்ற இயலுகிறது. நம்மில் எங்களுடைய பூரண இலக்குகளை அடையாதபோதிலும், செய்யவேண்டிய காரியங்கள் அதிகமிருக்கிறபடியால், நாம் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய காரியத்தை பரப்பவிரும்புகிறபோது, அதைச் செய்ய

அவர் நம்மை ஆசீர்வதிப்பார் என எங்களால் உறுதியாக அறிவுறுத்த முடிந்தது.

கிறிஸ்து, "...நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்"(மாற்16:15,16) என்றார். மறுபடியும், அவர், "...இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்"(யோவா.4:35) என்றார். இன்னொரு சமயம் அவர், "..... அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" (லூக்.10:2) என்றார்.

இயேசு, "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும் (மத்.7:7,8) எனவும் துரிதப்படுத்தினார். இந்தக்காரியங்கள் நிறைவேறும்படிக்கு, ஒரு தனிமனிதன் இதற்கான முயற்சியினை கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டுமென, இது குறித்ததான வாக்குத்தத்தங்களை தயவுகூர்ந்து கவனியுங்கள். ஆனால், தேனாலே எல்லாம் கூடும் (19:29) என்பதை நினைவுகூருங்கள், மேலும் தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? (ரோம.8:31). மறுபடியும் கிறிஸ்து நாம் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடினால், நம்முடைய தேவைகள் எல்லாம் கொடுக்கப்படும் (மத்.6:33) என்றார், மேலும் கர்த்தர் உலகத்தின் முடிவுபரியந்தமும் சகல நாட்களிலும் நம்மோடு இருப்பேன் எனவும் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். பவுல் தன்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய தனக்குப் பெலனுண்டு என அறிவித்தான் (பிலி.4:13).

என்னுடைய சகோதரரே, இதைப்பற்றி சற்று சிந்தியுங்கள். நாம் உலகைப் பார்க்க தரிசனத்தோடு கூட நம்முடைய கண்களை ஏறெடுக்கும்போது, நாம் இசைந்த உதவிக்காரர்களாக மாறுவோம்: தேவன் நம்மை பெலப்படுத்துகிறவர், கிறிஸ்து நம்மை வழிநடத்துகிறவர், சுவிசேஷம் (இரட்சிப்பிற்கென்று தேவவல்லமை யுடையது) பிரசங்கிக்கப்பட வேண்டியது, மேலும் நாம் கர்த்தருடைய பிள்ளைகளை நமக்கு உதவிசெய்யும்படிக்கும், ஊக்கப்படுத்தும் படிக்கும் பெற்றுள்ளோம். இதுமாத்திரமல்ல, ஆனால் மனந்திருந்திய ஒவ்வொருவனும் இன்னொரு வேலையாளாகவும், சுவிசேஷம் பரம்பி

மகிமைப்படுவதற்கு அதிகமான பண உதவியைக் கொண்டுவருகிறவனாகவும் மாறவேண்டும். நாம் இதைச் செய்ய ஆயத்தமாயிருக்கும்போது எந்த நேரத்திலும் உலகத்திற்கு கிறிஸ்துவை எடுத்துச் செல்ல முடியும். நாம் எழுந்து வாசல்களைத் தட்ட ஆரம்பித்து நமக்கென்று திறக்கப்பட்ட வாசல்களுக்குள் உட்பிரவேசிப்பது அவசியம். வாசல்களும் அதற்கு மேலாக வாசல்களும் கர்த்தருக்கென்றும் அவருடைய பணிக்கென்றும் பெரிய காரியங்களைச் செய்ய வழிநடத்தும் என்பதே வாக்குத்தத்தமாயிருக்கிறது. நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து “இதோ அடியேன், கர்த்தாவே, என்னை அனுப்பும்” எனக் கூறுவோமாக.

## வேத அறிவுப்போட்டி எண் 55 -ல் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| P. அலிஸ்மேரியம்மாள் | -வத்தலக்குண்டு |
| V.கோவலன் | -மதுரை |
| J.S.நிர்மலாஜான் | -மதுரை |
| A.ஆனந்த் | -மதுரை |
| P.S.லலிதாபிரேமகுமாரி | -மதுரை |
| S.சாம் பிச்சை | -மதுரை |
| S.தண்டபாணி | -சிலுவத்தூர் |
| S.எஸ்தர் மெர்ஸி | -வத்தலக்குண்டு |
| S.ஜெயராணி | -செ.பாளை |
| S.ஆனந்தராஜ் | -ஈரோடு |
| G.கிரேஸ்ஜெயா | -கள்ளிக்குடி |
| A.சேவியர்மேரி | -மதுரை |
| G.P.ஏசையன்ராஜ் | -கோபி |
| K.மோகன் | -கொ.பாளை |
| M.ராஜேஸ்வரி | -ராக்கியவலசு |
| E.டென்சிங்மனோகரன் | -மதுரை |

## ஜெபியுங்கள்

1. நாட்டின் சமாதானத்திற்காக...
2. சுனாமியினால் தங்கள் உறவினர்களை பறிகொடுத்த குடும்பங்களுக்காக...
3. கடந்த மாதம் ஈரோடு பகுதியில் நடைபெற்ற ஊழியங்களைக் கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காக...
4. தேனி மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் 18வது கருத்தரங்கை கர்த்தர் ஆசீர்வதிக்கும்படி....

## வேத அறிவுப்போட்டி எண் 55 -ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. அமத்சியா | -2நாளா.25:8 | 6.கிறிஸ்துவை | -பிலி.1:15 |
| 2.சத்தியமுமுள்ள | -யாத்.34:6 | 7.ஒருவராலே | -எபி.2:11 |
| 3.மோசே | -எண்.12:3 | 8.கிறிஸ்துஇயேசுவின் | -யோவா.1:17 |
| 4.யூதாஸ் | -அப்.5:37 | 9.ஆடுமாடுகள் | -யோபு36:33 |
| 5.பாக்கியவான்கள் | -ரோம.4:7 | 10.தமக்குப் | -சங்.103:13 |

# யார் அவர்களுக்குச் சொல்லுவார்?
# *Who will tell them?*

***Jack W.Carter***



பல வருடங்களுக்கு முன் நான் என்னுடைய அனுதின வேதவாசிப்பில் ஈடுபட்டிருக்கையில், நான் ஒரு தொடர்ச்சியான நிலை விடுபட்டிருப்பதைக் கவனித்தேன், அதனை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.

நான் மோசேக்கும் அதன்பின் யோசுவாவுக்கும் கொடுக்கப்பட்ட தேவனுடைய போதனைகள் பற்றி வாசித்துக் கொண்டிருந்தேன். தேவன் அவர்களுக்கென்று நிறைவேற்றியிருந்த அனைத்தும், அவர்கள் தங்களுடைய மனதிலும் தங்களுடைய இருதயங்களிலும் தம்முடைய வார்த்தைகளை காத்துக்கொள்ளும்படி தேவன் அவர்களை அழைத்தார். அத்தோடு வரப்போகின்ற தம்முடைய ஜனத்தின் சந்ததியாருக்கென தம்முடைய ஜனம் மறந்து போகாமல் அநுசரிக்கும்படியான சில கட்டளைகளையும் கைக்கொள்ளும்படி அவர்களை அழைத்தார்.

எளிய கூற்றில் கூறுவோமானால், மொத்தத்தில் அவருடைய போதனைகள் "உங்களுடைய பிள்ளைகளிடத்தில் என்னைப் பற்றி பேசு, ஒவ்வொரு நாளும் நான் அவர்களுடைய தேவன் என்றும் நான் அவர்கள் மேல் கண்ணோக்கமாயிருந்து காக்கிறவர் என்றும் அவர்களுக்குக் கற்றுக்கொடு" என அறிவுறுத்துகிறதாயிருக்கிறது. "எனக்கும் என்னுடைய கற்பனைகளுக்கும் கனத்தைச் செலுத்தும்படி அவர்களுக்குச் சொல்லு. "ஒவ்வொருநாளும் அவர்களுக்கு இதைப் பற்றிச் சொல்லு". "நீங்கள் எழுந்திருக்கும் போதும், தூங்கும்படி படுக்கைக்குச் செல்லும் போதும், வழியில் அவர்களோடு நடந்து செல்லும் போதும் இதைப்பற்றி அவர்களுக்குச் சொல்லு" வேறு வார்த்தையில் கூறினால், "என்னைப் பற்றி அவர்களுக்குச் சொல்லும் ஒரு வாய்ப்பினையும் இழந்து விடாதே"என்பதாகும்.

வருங்கால சந்ததியினர் உறுதியாக நிலைத்திருந்து தேவனோடு நெருங்கி இருக்கும்படிக்கு தேவன் தம்முடைய ஜனங்களுக்கு ஒரு திட்டத்தைக் கொடுத்திருந்தார். பரிதாபம், அதற்கடுத்த சந்ததியினர் தேவனைப் பற்றி அறிவிக்கப்படாததாயிருந்து தேவனுக்கு ஏற்காதபடி மாத்திரமல்ல எந்த ஒரு சாதாரண நிலையிலும்

இழிவான துன்மார்க்கமான வாழ்வு வாழ ஆரம்பித்தனர்.

ஜனங்கள் ஏன் இதைச் செய்கின்றனர்? தேவனையும் நமக்கென்று அவர் கொடுத்த போதனைகளையும் அறியாதவர்களாக வளர நம்முடைய பிள்ளைகளை நாம் ஏன் விட்டு விடுகிறோம்? தேவனைப் பற்றி கற்பிக்கப்படாத பிள்ளைகள் தேவனுக்கு தங்களுடைய முதுகைக் காண்பிப்பார்களென்பதை பல உதாரணங்கள் மூலம் நாம் நன்றாய் அறிந்துள்ள போதும் நாம் ஏன் இவ்வாறாகச் செய்கிறோம்?

பிரியமான பெற்றோர்களே, தேவனோடு உறவுவைத்துக் கொள்ளும்படி உங்களுடைய பிள்ளைகளை உருவாக்குவது மூப்பர்கள், பிரசங்கிமார்கள் அல்லது வேதபாட வகுப்பு ஆசிரியர் போன்றவரின் பொறுப்பல்ல..... இது உங்களுடைய பொறுப்பு. ஒரு நாள் கூட தேவனைப் பற்றி உங்களுடைய பிள்ளைகளுக்குப் போதிக்காமலிருந்துவிடாதீர்கள்.

நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு போதிக்காவிட்டால், அவர்கள் ஒருவருக்கும் செவிசாய்க்கமாட்டார்கள் என்பது அதிக நிச்சயம். நீங்கள் உங்களுடைய அக்கறையற்ற நிலையினை தேவனிடத்தில் மெய்ப்பிப்பீர்களானால், அவர்கள் அதே போல் மிக அதிகமாகவே அதே காரியத்தைச் செய்வார்கள்.

## பொது அறிவுச் சோதனை

1. செயற்கைக்கோள் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள முதல் பல்கலைகழகம் எது?

அ)அண்ணா பல்கலை கழகம் ஆ)டெல்லி பல்கலை கழகம் இ)கொல்கத்தா பல்கலைக் கழகம்

2. உலகின் முதல் வணிக கம்யூட்டரின் பெயர் என்ன?

அ)எனியாக் இ)லியோ இ)ஐ. பி. என்.701

3. தன்னுடைய நாட்டு மூலிகை மருந்துகள், மூலிகைச் செடிகள் பாதுகாப்பிற்காக தனியாக அமைச்சகம் அமைத்த முதல் நாடு எது?

அ) இந்தியா ஆ)நேபாளம் இ) ஸ்ரீலங்கா

4. செவ்வாய் கோளை படம் எடுத்த முதல் விண்கலம் எது?

அ)மரைனர்-6 ஆ)ஜெமினி-2 இ)சோயுஸ்-1

5. உலக வன விலங்கு பாதுகாப்பு கழகத்தின் சின்னமாக எந்த விலங்கு இடம் பெற்றுள்ளது?

அ)கங்காரு ஆ)பெரிய பாண்டா இ)சிங்கம்

விடைகள்: 1. அண்ணா பல்கலை
கழகம் 2. எனியாக் 3. இந்தியா
4. மரைனர்-6 5. பெரிய பாண்டா

'ஒரேவழி' தபால் வழி பாடத்தை உங்கள் திருச்சபையில் அறிமுகம் செய்ய விரும்புகிறோம். விருப்பமுள்ள சபை ஊழியர்கள் எங்களோடு தொடர்பு கொள்ளவும். இயேசு ஒருவரையும் புறம்பே தள்ளவில்லை அதே போல் நாங்களும் ஒருவரையும் புறம்பே தள்ளுகிறதில்லை.

பாடம் - 13

# இன்றுள்ள சபை
# THE CHURCH TODAY

**J.C.Choate**

கர்த்தருடைய சபை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாக ஸ்தாபிக்கப்பட்டது (அப்2). ஆனால் அன்று இருந்த நிலையிலேயே அது இன்றும் இருக்கிறது. "ஆனால் இது எப்படி சாத்தியமாகும்?" என்று நீங்கள் கேட்கலாம் இதற்கு விடை புதிய ஏற்பாட்டு மாதிரியை எளிமையாய் பின்பற்றுவதன் மூலமே, சாத்தியமாகும்.

இன்றுள்ள சபை அன்று கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மூல சபைதான் என்பதை நிரூபிக்க வருடா வருடம் பெந்தெகொஸ்தே நாள் சம்பவத்திற்குச் சென்று ஆராய்ந்து அடையாளம் காண வேண்டும் என்பது சிலருடைய எண்ணம். எப்படியிருப்பினும் இது உண்மையன்று. முதலாவதாக கர்த்தர் நமக்குச் சொல்லியிருக்கிற, ராஜ்யம் அல்லது சபை அழிவைக் காணாது, அது என்றென்றும் நிலைத்திருக்கும் என்று நமக்குக் கூறியிருக்கிறார் (தானி.2:44; லூக்.1:33; எபி.12:28). இதன் பொருள் ஆரம்பம் முதல் இன்றுவரை சபையானது உலகின் ஏதோ ஒரு பகுதியில் நிலைத்திருந்துள்ளது. இது உண்மையாக்கப்பட எல்லா இடங்களிலும் எப்பொழுதும் நிலைத்திருக்க வேண்டுவதில்லை. அடுத்ததாக, புதிய ஏற்பாட்டிலே பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள வசனங்களாகிய வித்து நமக்கு உள்ளது (லூக்.8:11). அப்போஸ்தலர்கள் காலத்தில் இந்த வித்துக்கள் கிறிஸ்தவர்களை மாத்திரம் பிறப்பித்திருக்குமேயாகில் இன்றும் "கிறிஸ்தவர்களை" மாத்திரமே அது பிறப்பிக்கும். அப்போஸ் தலர் காலத்தில் கிறிஸ்தவர்களடங்கிய கூட்டமே சபையாக உரு பெற்றிருந்ததனால், இன்றும் அது உண்மையானது. ஆகையால், புதிய ஏற்பாடு எங்கெல்லாம் நிலைத்திருக்கிறதோ அங்கெல்லாம் கர்த்தருடைய சபை நிலைத்திருப்பது சாத்தியமே. விருப்ப முள்ளோர் அது சொல்வதை செய்வார்கள்.

தேவன் எப்பொழுதுமே தமது மக்கள் பின்பற்ற ஒரு மாதிரியை கொடுத்திருக்கிறார். நோவா பேழையைக் கட்ட அவர் ஒரு மாதிரியைக் கொடுத்தார் (ஆதி.6). ஆசரிப்பு கூடாரத்தைக்கட்ட மோசேயிக்கு அவர்

ஒரு மாதிரியைக் கொடுத்து. "....மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கை யாயிரு, என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்" (எபி8:5). எனவே புதிய ஏற்பாட்டில் கர்த்தருடைய சபையின் பூரணப் பட்ட மாதிரிகள் நமக்கு உள்ளன. நோவாவும் மோசேயும் பேழையையும், ஆசரிப்புக் கூடாரத்தையும் அமைப்பதில் மாதிரியைப் பின்பற்றியபோது, தேவன் அதன் பலனைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். எனவே நாமும் ஒன்றையும் கூட்டாமலும், குறைக்காமலும் சபையின் மாதிரியைப் பின்பற்றினால், தேவன் அதன் பலனைக் கண்டு மகிழுவார் (வெளி.2:18,19).

சபையைக் குறித்த அனைத்து அச்சடையாளங்களும் புதிய ஏற்பாட்டில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. சபை என்றால் என்ன? அதை ஸ்தாபித்தது யார்? எங்கே ஸ்தாபிக்கப்பட்டது? எப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டது? அதை அறிமுகப்படுத்த பயன்படுத்தப்பட்டுள்ள பெயர், அதன் அங்கத்தினர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பெயர், அதில் அங்கம் வகிப்பது எப்படி, அதன் ஆராதனை முறை, அதன் பணி ஆகிய அனைத்தையும் கர்த்தர் கூறியிருக்கிறார். யார் அதன் தலைவர் என்பதையும், அவர் அதற்கு செலுத்திய கிரயம் , அதன் இரட்சகர் யார் போன்றவைகளையும் அது சொல்லுகிறது. அது என்ன என்பதைக் குறித்தோ, அதன் அலுவல்கள் என்ன என்பதைக் குறித்தோ, எவ்வித சந்தேகத்தையும் அது நமக்கு விட்டுவைப்பதில்லை. தேவனுடைய வசனத்தில் எவ்வளவு தெளிவாய்ச் சொல்லப்பட்டுள்ளதோ அவ்வளவு தெளிவாய் அதன் மாதிரியும் காணப்படுகிறது.

எனவே, வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள உண்மை சபையை அறிய வேதத்தை நாம் கற்பது அவசியமாகும். நாம் இதைப்பற்றிய சத்தியத்தை அறிந்து அதைப் பின்பற்றும் போது, நாம் அதன் அங்கங்களாகிறோம். இப்படியாக கிறிஸ்து ஆரம்பத்தில் ஸ்தாபித்த அதே சபையில் அங்கமாகிறோம். விதை தன் இனத்தைப் பிறப்பிப்பது போல, தேவனுடைய வசனம் எப்பொழுதும் போல் உள்ள கிறிஸ்தவர்களாகிய அங்கத்தினர்களையே பிறப்பிக்கும்.

கிறிஸ்துவின் சபை உலகெங்கிலும் காணப்படுகிறது. அது இங்கேயும் இருக்கிறது, எங்கும் உள்ளது. வேதம் போதிப்பதை மனுஷன் பின்பற்றும்போது, அது எங்கும், எப்பொழுதும் நிலைபெறும். தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற உலகில் எப்பகுதியிலும் அது நிலைபெறும்.

கிறிஸ்துவின் சபை வேதாகமத்தை மாத்திரம் பின்பற்று கிறபடியால் அது வளர்ந்து பெருகிக் கொண்டே இருக்கிறது. அது

பிரிவினைகளை கண்டித்து, கிறிஸ்துவை உயர்த்துகிறது. இந்த ஒரே சபையைக் குறித்துதான் வேதத்தில் வாசிக்கிறோம். இது நாமகரணக் கூட்டமுமல்ல, நாமகரணங்களின் கூட்டமைப்பும் அல்ல. இது புராட்டஸ்டண்டும் அல்ல, கத்தோலிக்கமுமல்ல. அப்படியானால் இது என்ன? இது கர்த்தருடைய சபை அவ்வளவுதான்.

கர்த்தருடைய சபைக்கு பூமிக்குரிய தலைவரோ, தலைமையகமோ இல்லை. எந்த மனிதனையும் நாம் உயர்த்துவதில்லை. மாம்ச சிந்தையிலான உயர்ந்த அமைப்புகளைக் கொண்டிருப்பதில்லை. ஒவ்வொரு பிராந்திய சபையும் தன் தன் மூப்பர்கள், உதவிக்காரர்கள் பிரசங்கியார்கள், போதகர்கள், மற்றும் அங்கத்தினர்களைக் கொண்டு அமைவு பெற்று, தன்னாட்சி செய்கிறது. மதத் தலைவர் அல்லது சாதாரண மக்கள் என்ற வேறுபாட்டினை சபை கொண்டிராதபடியால், ஒரு அங்கத்தினர் மற்ற அங்கத்தினர்களுக்கு மேலாக உயர்த்தப்படுவதில்லை.

கிறிஸ்துவின் சபைக்கு எப்போதுமே எதிரிகள் இருந்தனர். இப்பொழுதும் இருக்கின்றனர். மனித மார்க்க அமைப்புகள் தங்களது மாதிரியைப் பின்பற்றாமையால் எதிர்ப்பு தெரிவிக்கின்றன. தாங்கள் மனித உபதேசத்தைப் பின்பற்றுவதால், யாரோ சிலர் வேதாகமத்தை மாத்திரம் பின்பற்றுகின்றனர் என்பதை மிகவும் உன்னிப்பாக அவர்கள் கவனிக்கின்றனர். அவர்கள் மனிதர்களைப் பின்பற்றி மனிதப் பெயர்களைத் தரித்துக் கொண்டிருக்கையில், நாம் கிறிஸ்துவை பின்பற்றி, கிறிஸ்துவின் பெயரை தரித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அவர்கள் அறிவார்கள். நமக்கு எதிரான அவர்களுடைய ஆயுதங்களெல்லாம் சத்தியமல்ல, மாறாக ஜனங்களின் இருதயங்களில் தவறான கருத்துக்களைப் புகுத்தி, நம்மை தவறாக காட்டுவதே ஆகும். ஆகிலும் அவர்களின் பிரயாசங்கள் விருதா.

காலங்களினூடே கர்த்தருடைய சபை வெற்றி நடை போடுகிறது. இவ்வுலகத்தில் அனைத்து எதிரிகளும் நரகத்தின் அனைத்து பிசாசுகளும் அவளை (சபையை) தடை செய்ய முடியாது. தன்னைச் சுற்றிலுமுள்ளவர்களைக் காட்டிலும் அவள் சிறிய எண்ணிக்கையுள்ளவளாக இருக்கலாம், ஆனால் அந்த சிறிய எண்ணிக்கைதான் இரட்சிக்கப்படும் (மத்.7:13,14). கிறிஸ்துவுக்கு ஒரு சபைமட்டுமே உண்டு, அந்த சபைக்காக மட்டுமே கிறிஸ்து ஒரு நாளிலே திரும்ப வருவார் (எபே.5:27; யோவா.14:1-6). அவரே தமது ராஜ்யத்தில் ராஜா. அவர் அதற்காக வந்து அதை தேவனிடத்தில் ஒப்புக்கொடுப்பார் (1கொரி.15:24). அவருக்கு ஒரே ஒரு மணவாட்டி உண்டு (வெளி.21:19). எனவே தனது நாமம் தரித்துக்கொண்ட அந்த

மணவாட்டியைச் சேர்த்துக் கொள்ள அவர் வருகிறார். மற்றவர்களைக் குறித்து காரியம் என்ன? தான் ஒருக்காலும் அவர்களை அறியவில்லை என்று மறுப்பதோடு அவர்களை வேரோடே பிடுங்கிப் போடுவார் (மத்.15:13). அவர்கள் ஒன்றாகக் கூட்டிச் சேர்க்கப்பட்டு அக்கினியிலே தள்ளப்படுவார்கள்.

இன்று எமது வேண்டுகோள்களெல்லாம், புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்திற்குத் திரும்புங்கள் என்பதே. தேவனுடைய வசனத்திற்குத் திரும்புங்கள், அதுவே உங்கள் வழிகாட்டியாகட்டும். வேதத்தை அறியுங்கள் அப்பொழுது நீங்கள் சத்தியத்தை அறிவீர்கள் (மத்.15:13). அது என்ன சொல்லுகிறதோ அதைச் செய்யுங்கள், அப்பொழுது வேதாகமத்தில் வாசிக்கிற சபையில் இரட்சிக்கப்பட்டு நீங்கள் சேர்க்கப்படுவீர்கள்.

நீங்கள் கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினராக இல்லாதிருப்பின் நீங்களும் ஒரு அங்கத்தினராகும்படி ஊக்கப்படுத்துகிறோம். தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, நீங்கள் இரட்சிக்கப்படும்படி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் (மாற்.16:16; ரோம.10:10; அப்.2:38). பிறகு கர்த்தர் உங்களை சபையிலே சேர்த்துக் கொள்வார். நீங்கள் ஒரு கிறிஸ்தவனாவீர்கள் (அப்.2:47; 11:26). நீங்கள் அதைச் செய்வீர்களா? அதைச் செய்யும்படி உங்களை யாரும் வற்புறுத்தப்போவதில்லை ஆனால் நீங்கள் வேதத்தை வாசிப்பீர்களாகில், நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக மட்டும் இருப்பதை விரும்புவீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். இப்படியாக உங்கள் வாழ்வின் பின் பகுதிகளை கர்த்தருக்காகவே வாழ்ந்து காட்ட முயற்சிப்பீர்களா? ராஜ்யத்தின் எல்லைகளை விஸ்தாரமாக்குவீர்களாக.

## கேள்விகள்

**தயவு செய்து சரியான விடைகள் தருக:**

1. சபை எப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டது?--------------------------------
2. சபை இன்று நிலைத்திருக்கிறதா?--------------------------------
3. இது கர்த்தருடைய சபைதான் என அடையாளம் காண நூற்றாண்டுகளினூடே நடைபெற்ற சம்பவங்களை அறிய வேண்டியது அவசியந்தானா?--------------------------------
4. ராஜ்யம் எதுவரைக்கும் நிலைபெறும் என்று கர்த்தர் சொன்னார்?-
--------------------------------
5. ராஜ்யத்தின் வித்து எது?--------------------------------
6. வித்து இன்று எதைப் பிறப்பிக்கும்?--------------------------------

7. நோவாவுக்கும், மோசேக்கும் தேவன் கொடுத்த கட்டளை என்ன?-
--------------------------------------------------------------------------------

8. கர்த்தருடைய சபையின் மாதிரியை எங்கே காண்கிறோம்?----------
--------------------------------------------------------------------------------

9. கர்த்தருடைய சபையின் அச்சடையாளங்களை எங்கே காணலாம்?-----------------------------------------------------------------

10. கர்த்தர் சபையைக் குறித்து எங்கே சொல்லியிருக்கிறார்?------------
--------------------------------------------------------------------------------

11. ஒரே உண்மையான வேதாகமச் சபையை எப்படி நாம் அறிந்து கொள்ளக்கூடும்?-----------------------------------------------------

12. இன்று கிறிஸ்துவின் சபையை நாம் எங்கே காணலாம்?------------
--------------------------------------------------------------------------------

13. இந்த சபை ஒரு நாமகரணக் கூட்டமா?-----------------------------

14. இதற்கு பூமிக்குரிய தலைவரோ தலைமையகமோ உண்டா?-------
--------------------------------------------------------------------------------

15. சபையின் விரோதிகள் யார்?----------------------------------------

16. அவர்களின் கருவிகள் யாவை?--------------------------------------

17. காலங்களினூடே சபை வெற்றி சிறந்து வந்துள்ளதா?---------------
--------------------------------------------------------------------------------

18. கிறிஸ்து எதற்காக திரும்ப வருகிறார்?-----------------------------

19. நமது வேண்டுகோள் என்ன?-----------------------------------------

20. கிறிஸ்தவனாவதற்கும் கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிப்பதற்கும் உள்ள படிகளை வரிசைப்படுத்துக?-------------------
--------------------------------------------------------------------------------

***தயவு செய்து சரியான பதிலை வட்டமிடவும் :***

சரி / தவறு 1. கிறிஸ்து ஸ்தாபித்த சபை இன்று நிலைத்திருக்கிறது.

சரி / தவறு 2. ஒரே ஒரு உண்மை சபை மட்டுமே உண்டு.

சரி / தவறு 3. அது கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக் கொள்கிறது.

சரி / தவறு 4. ஒருவர் தான் இரட்சிக்கப்பட கிறிஸ்துவின் சபை அங்கத்தினராக மாற வேண்டியது அவசியமா?

சரி / தவறு 5. கிறிஸ்து தமது சபைக்காக ஒரு நாளில் திரும்ப வருகிறார்.

**"உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம்" சங்.119:97**

பெண்கள் பகுதி

# அழிவை நோக்கி...

**J.Glory Arjunan**



அன்பு சகோதரிகளே, இன்றைய உலகம் அழிவை நோக்கிச் செல்கிறது என்பதை எப்போதாவது சிந்தித்ததுண்டா? புறஜாதியான் கூறுகிறான் இது 'கழியுக காலம்' என்று நாமோ இது 'கடைசி காலம்' என்கிறோம். ஆம், உண்மையிலும் உண்மை இது கடைசி காலமே! செய்தித்தாளை புரட்டினால் அங்கே சில அழிவின் சம்பவங்கள், வானொலி செய்திக்குச் செவிமடுத்தோமானால் அங்கே சில நாசச் செய்திகள், தொலைக்காட்சிப் பொட்டியின் செய்தி நேரத்திற்குக் கவனத்தைத் திருப்பினால் அங்கேயும் சில கோரச்சம்பவங்கள். இப்படி மனிதருக்கு விரோதமாக மனிதனின் செயல்பாடுகள், இயற்கைச் சீற்றங்கள், பாவத்தின் விளைவால் வரும் அழிவுகள் என அழிவுகள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. வேதாகமும் கடைசிக்காலச் சம்பவங்கள் குறித்து அழகாய் விவரித்துள்ளது. எது எப்படியிருப்பினும், நோவாகாலத்தில் வாழ்ந்து வந்த மனுஷரைப் போலவே இன்றும் மனுஷன் நிர்விசாரமாகவே வாழ்கிறான். அன்பு சகோதரிகளே, நாம் எப்படி? அழிவின் பாதையில் அகந்தையாய் நடக்கிறோமா? அல்லது ஜீவனுக்குப் போகும் பாதையில் பொறுமையாய் நடந்து கொண்டிருக்கிறோமா?

நீதிமொழிகள் 16:18 கூறுகிறது, "அழிவுக்கு முன்னானது அகந்தை". சகோதரிகளாகிய நாம் இங்கு சற்று நின்று நிதானிக்க வேண்டியது அவசியம். நம்மில் ஏதேனும் அகந்தையான எண்ணம் உள்ளதா? நம்முடைய சுகபோக வாழ்வு, நம்முடைய பிள்ளைகளின் பராக்கிரமம், நம்முடைய செல்வம், சமுதாயத்தில் நம்முடைய செழுமை, இன்னும் வேறெதைக் குறித்தாவது நமக்குள் பெருமையான, அகந்தையான எண்ணமுண்டா? நம்முடைய மனமேட்டிமை நம்மை விழச்செய்யும் என வேதம் கூறுகிறது(நீதி.16:18). மேலும் "மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்...." (நீதி.16:5) எனவும் வேதம் கூறுகிறது. இவையெல்லாம் எனக்குள் இல்லை என்கிறீர்களா? நல்லது. அப்படியென்றால் நீங்கள் எப்போதாவது உன் சகோதரியைக் குறித்தோ, அல்லது தோழியைக் குறித்தோ அல்லது உடனிருப்பவரைக் குறித்தோ அற்பமாக எண்ணியிருக்கிறாயா? இன்றைய உலகில் பெருமை

தலைவிரித்தாடுவதோடு, மற்றவர்களை அற்பமாக எண்ணி அலட்சியம் செய்து மனமுடையச் செய்வதும் அதிகமாகக் காணப்படுகிறது. உண்மையில் இவர்களெல்லாரும் அழிவை நோக்கிச் செல்பவரே! "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்.18:10 என இயேசு சொல்கிறார். இதை வாசிக்கும் அன்பு சகோதரியே, உன்னை நீயே நிதானித்து அறிந்து கொள். இப்பேர்பட்ட குணமெல்லாம், அழிவை நோக்கிச் செல்லுகின்ற உலகத்தாரின் குணம். நீங்கள் உண்மையாகவே கிறிஸ்துவுக்குள்ளிருப்பீர்களென்றால், "...... ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்" (பிலி.2:3). பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்(1பேது5:5).

மேற்கூறியவை இருக்கப்பட்டவர்களின் மன நிலை: ஆனால் இல்லாதவர் மனநிலையோ அதிலும் மேலானதாயுள்ளது. ஆம், நவநாகரீக உலகம் ஏழ்மையில் இருப்பவர்களையும் நிம்மதியாக இருக்கவிடுவதில்லை. இப்பேர்பட்டவர்கள் தங்களின் இயலாமையை மறந்து, உள்ளவைகள் போதுமென்றிருக்கக் கடவோம் என்ற சத்தியத்தின் சத்தத்திற்குச் செவிமடுக்காமல் ஐசுவரியவான்களாக விரும்புகிறார்கள். இவர்களைப் பார்த்து வேதம், "ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்"(1தீமோ.6:7) என்கிறது. மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகெட்ட பலவித இச்சைகளிலும் விழச்செய்கிறது. காரணம் ஐசுவரியவானாக வேண்டும் என்ற விருப்பம். நேற்றுவரை என்னோடே படித்தவள், வேலை பார்த்தவள், இன்றோ அடேங்கப்பா எப்பேர்பட்ட செல்வாக்கு, கார், பங்களோ, என அடிக்கிக் கொண்டே போய் மற்றவர்களைப் பார்த்து அழிவை அறுவடை செய்கிறவர்கள் இவர்கள். அன்பு சகோதரியே உலகத்தைப் பாராதே. அது உன்னை உருக்குலையப்பண்ணும். இன்று காண்கின்ற இந்த உலகம் அக்கினிக்கு இரையாகும். அழிந்து போகப்போகிற இவ்வுலகம் உன்னையும் அழித்துவிடும். "உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்"(1தீமோ.6:8). "உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்....."(1யோவா.2:15) ஏனெனில் "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்"(யோவா.2:17). ஆம் நாம் காண்கின்ற அனைத்தும் அழிவை நோக்கிச் செல்கிறது. நாம் அதன்பின் செல்லலாமா?

சில தினங்களுக்கு முன் செய்தித்தாளின் இலவச இணைப்பில்

'மிரட்டும் தண்ணீர் பஞ்சம்' என்ற தலைப்பின் கீழ் ஓர் செய்தியினை வாசித்தேன். இயற்கையெல்லாம் இறைவனின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதை மறந்து அனுதினமும் மனிதன் இயற்கையோடு கடுமையாக போராடி புது புது செய்தியினை வெளியிட்டுக் கொண்டேயிருக்கிறான். "விஞ்ஞானிகள் ஆராய்ச்சியின் அடிப்படையில் இனிவரும் நாட்களில் தண்ணீருக்கு கடும் பஞ்சம் ஏற்படும் என்கின்றனர். இமயலைப்பகுதியில் பனி உருகுவது அதிகமாகிறது. தற்போது ஆண்டுக்கு 10 முதல் 15 மீட்டர் உயரத்துக்குப் பனி உருகுகிறது. அந்த அளவுக்கு பனியின் அளவு அதிகரிப்பதில்லை. இது நீடித்தால் இமயமலை முழுவதுமாக பனி இல்லாத வறண்ட மலையாக மாறிவிடும். தற்போது இமயமலையிலிருந்து உருவாகி ஓடிவரும் நதிகளும் வறண்டு விடும். அதே போல் தென்துருவத்தில் மனிதர் வாழ முடியாத அண்டார்டிகா கண்டத்திலும் பனிமலையின் அளவு குறைந்து சுமார் 3,250 ச.கி.மீ. அளவும் 200 மீட்டர் அளவு ஆழமும் கொண்ட பனி பாறைகள் உடைந்து கடலில் கலந்துள்ளது இதனால் கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் கடல் வெப்ப நிலை மாறுபட்டு மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் ஆபத்துள்ளது என எச்சரித்துள்ளனர். காரணம் ஓசோன் படலத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டைதான் என்கின்றனர்". இதையெல்லாம் அறியும் போது சோதோம் கொமோரா பட்டணங்களைப் பற்றிய நினைவுதான் வருகிறது. ஐயோ! அழியப் போகிறது நம்முடைய ஆஸ்திகள் என நினைத்தாளோ என்னமோ, லோத்தின் மனைவி உலகத்தைத் திரும்பிப் பார்த்து உப்புத்தூண் ஆனாள். அன்பு சகோதரிகளே, சற்று சிந்தியுங்கள். நீங்கள் எவைகளைக் குறித்து அகந்தை கொண்டுள்ளீர்களோ, அவைகள் அழிவை நோக்கிச் செல்கின்றன. நீங்கள் எதன் மீது இச்சை கொண்டு ஐசுவரியவானாக விரும்புகிறீர்களோ அவைகள் அழிவை நோக்கிச் செல்கின்றன. தேமா என்பவன் இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை வைத்து ஆவிக்குரிய நண்பன் பவுலை விட்டு பிரிந்து போனான். இன்றும் அநேகர் இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை வைத்து அருமையான கர்த்தருக்குப் பிரியமான சகோதர சகோதரிகளின் ஐக்கியத்தை விட்டு பிரிந்து செல்கின்றனர். கிறிஸ்துவுக்குள் மிகப்பிரியமான சகோதரியே, நீயும் இவ்வாறு இருப்பாயானால் சந்தேகமேயில்லை நீ அழிவை நோக்கிச் செல்கிறாய்!

இயேசு, "வானமும் பூமியும் ஒழிந்துபோம் என் வார்த்தைகளோ ஒழிந்து போகாது" என்றார். ஆம் அழிந்து போகிற இந்த உலகத்திற்கு ஒத்த வேஷந்தரியாதிருங்கள். உங்களுடைய நடை, உங்களுடைய உடை, உங்களுடைய நடக்கைகள் எல்லாம் 1தீமோ.2:9-10-ல் கூறப்பட்டுள்ளபடி "........தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், **தேவபக்தியுள்ளவர்**

களென்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும்" என்பதற்கேற்ப அமைவதாக!

அழிவை நோக்கி செல்வதும், ஜீவனை நோக்கிச் செல்வதும் உங்கள் சாய்ஸ். இதோ மரண வழியையும் ஜீவ வழியையும் கர்த்தர் உங்கள் முன் வைக்கிறார். இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் (அழிவுக்கு) போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது......ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது....." வானமும் பூமியும் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டுள்ளது. இன்னும் காலம் கடத்தாதீர். இன்றே இரட்சண்ய நாள், அழிவை நோக்கிச் செல்லும் அன்பு சகோதரியே சற்றே உன் பாதையை மாற்றி ஜீவனுக்குள் பிரவேசிக்க முற்படு. என்றென்றும் ஒழிந்து போகாத வேத வசனத்தைக் கேட்டு, விசுவாசித்து, இயேசுவை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக் கொள் அப்பொழுது இரட்சிக்கப்படுவாய். நித்திய ஜீவனை அடையும் சிலாக்கியத்தையும் பெறுவாய். கர்த்தர் தாமே உன்னை தம்மிடமாய் இழுத்துக் கொள்வாராக!

## தெரிந்து கொள்வோம்
## வியாழன் கிரகம்

புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகிய கிரகங்கள் சூரியனை சுற்றிவருகின்றன. 9 கிரகங்களில் வியாழன் கிரகம் தான் மிகப் பெரியது. இது சூரியனில் இருந்து 77கோடியே 83 லட்சம் கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. ஒரு லட்சத்து 42 ஆயிரத்து984 கிலோமீட்டர் விட்டம் கொண்ட வியாழன்கிரகம் ஒரு முறை சூரியனைச் சுற்றி வர 11வருடம் 8 மாதங்கள் ஆகின்றன .

சூரியனை நீள் வட்டப்பாதையில் சுற்றி வரும் வியாழன் கிரகத்துக்கு 4 துணை கிரகங்கள் உள்ளன. வியாழன் கிரகம் பூமியின் எடையை விட 330 மடங்கு அதிக எடை கொண்டதாகும்.

### ஒரு சிந்தனை

கிறிஸ்து தம்முடைய தனிப்பட்ட ஊழியத்தில் தகுதியுடையவனை அழைக்கவில்லை. அழைக்கப்பட்டவனை அவர் தகுதிப்படுத்தினார்! சபை இதே காரியத்தையே செய்யவேண்டும். சுவிசேஷத்தினால் அழைக்கப்பட்டவர்கள் அதற்காக பயிற்றுவிக்கப்பட்டு ஊழியஞ்செய்யும் நிலைக்குள்ளாக வழிநடத்தப்பட வேண்டும்.

-from "Mountain Echoes"

**தேவனைப் பற்றி மனிதரிடம் பேசுவது முக்கியம் ஆனால் மனிதரைப் பற்றி தேவனிடம் பேசுவது மிக முக்கியம்**

# வேதத்தை படிக்கும் முன் சில எச்சரிப்புகள்

*S.Yesiahan*



கர்த்தருடைய வேதத்தை படிப்பவர்களாகிய நாம் வேதம் சொல்லுகிறபடி படிக்கவேண்டும். தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்; தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர். அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்து கொள்ளுவார், நீ பொய்யனாவாய் என்று நீதிமொழிகள் ஆசிரியர் கூறுகிறார்(நீதி.30:5,6). சகோதரரே, எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ண வேண்டாமென்று நீங்கள் எங்களாலே கற்றுக்கொள்ளவும்...... (1கொரி.4:6) என்று பேதுரு கூறுகிறார்.

ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின் படி போதிக்கடவன்; (1பேதுரு4:11) என்று பேதுரு கூறுகிறார்......... ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப்புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன் மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவ புஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும் இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப் போடுவார்(வெளி.22:18,19) என்று யோவான் எழுதுகிறார். ......நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம் (உபா.4:2) என்று மோசே கூறுகிறார்.

இப்படி வேதத்தின் முக்கியத்துவத்தை குறித்தும் இதில் கூட்டவோ, குறைக்கவோ கூடாது என்பதை குறித்தும் பரிசுத்த ஆவியானவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதை பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்து போவது எளிதாயிருக்கும்(லூக்.6:17) என்று நமது ஆண்டவர் கூறுகிறார். இந்த விஷயத்தில் எந்த அளவுக்குத் தெளிவுள்ளவர்களாய் இருக்கிறோம் என்பதை சிந்தியுங்கள். இன்றைக்கு இருக்கும் தலைவர்கள் ஆதாயத்திற்காக எந்த அளவுக்கு வசனத்துடன் கூட்டி மனித ஞானத்தை நமக்கு போதிக்கிறார்கள் என்பதை நிதானித்து பாருங்கள். அப்படிப்பட்டவர்களைக் குறித்து ...... நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிவேசிக்கப்போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை என்று (மத்.23:13) இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

இப்படி மனிதனுடைய ஞானத்தின்படியும், போதனையின் படியும் நாம் நடந்துகொண்டால் நித்திய ஜீவனை இழந்துவிடுவோம் என்பது நிச்சயம்.மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரணவழிகள்(நீதி.14:12).இப்படி தேவனுடைய வசனத்தோடு கூட்டிக் கொண்டவர்களின் நிலை என்ன? என்பதை சற்று கவனிப்போம்.

1. நாதாபும் அபியூவும் கர்த்தர் தங்களுக்கு கட்டளையிடாத அந்நிய அக்கினியை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வந்தார்கள். அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது; அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள்(லேவி.10:2).

2. சவுல் ராஜா தன் விருப்பத்தின்படி தேவனை பிரியப்படுத்த விரும்பினான். ஆகவே நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்று கர்த்தர் சொன்னார்(1சாமு.15:11).

3. மோசே பேசுவதற்கு பதிலாக கோலால் அடித்தான். கர்த்தர் சொல்லாத காரியத்தை மோசே செய்ததினால் கானான் தேசத்தை இழந்துவிட்டான்(எண்.20:11,12). அவன் கர்த்தரிடத்தில் விண்ணப்பம் செய்தும் அவன் கானான் தேசத்துக்குள் போக அனுமதிமறுக்கப்பட்டது. இனி இந்த காரியத்தைக் குறித்து என்னோடே பேசவேண்டாம் என்று கர்த்தர் திட்டவட்டமாக கூறிவிட்டார் (உபா.3:23-26). மோசேக்கே இந்த கதி என்றால் நாம் எத்தனை விஷயங்களில் வேதத்திற்கு விரோதமாய் கூட்டிக் கொள்கிறோம் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

4. ஊசா தேவனுடைய பெட்டியினிடமாய்த் தன் கையை நீட்டி அதை பிடித்தான். அப்பொழுது கர்த்தருக்கு ஊசாவின் மேல் கோபமூண்டது; அவனுடைய துணிவினிமித்தம் தேவன் அங்கே அவனை அடித்தார்; அவன் அங்கே தேவனுடைய பெட்டியண்டையில் செத்தான்(2சாமு.6:6,7).

எனக்கு அன்பான சகோதர சகோதரிகளே நீங்கள் எந்த கூட்டத்தைச் சார்ந்தவர்களாயிருந்தாலும், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தாராய் இருந்து நித்திய ஜீவனை தக்கவைத்துக் கொள்ளுங்கள்(சங்.119:1). ஏனென்றால்.......முன்பு எழுதியிருக்கிறவை களெல்லாம் நமக்கு போதனையாக எழுதப்பட்டிருக்கிறது(ரோம.15:4). நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது என்று பவுல் கூறுகிறார்(1கொரி.10:11). ஆகவே மனுஷனுடைய பாரம்பரியத்தையும் கோட்பாடுகளையும் விட்டு விலகி நம்மை அழைத்தவர் யார் என்பதை உணர்ந்து அவருடைய சித்தத்தின் படி நடந்து வேதத்தோடு கூட்டவோ குறைக்கவோ செய்யாமல் நமக்கு நலமாய் தோன்றுகிற காரியத்தை செய்யாமல் கர்த்தருக்குப் பிரியமானது எது என்று அறிந்து

அதின்படி செய்வோம்(எபி.12:28). ஏனென்றால் இதில் எழுதப்பட்டவைகள் அனைத்தும் கர்த்தருடைய ஆலோசனைகள் என்று உணர்ந்து வேதத்தை திறந்து படித்து அதன்படி நடந்து நம்மை காத்துக்கொள்வோம்.

இது கட்டுக்கதைகள் அல்ல ஜீவனுள்ள தேவனுடைய எச்சரிப்பான வார்த்தைகள். ஆகவே சகோதர சகோதரிகளே, கர்த்தருடைய வருகை சமீபித்திருக்கிறபடியினால் நாம் யாவரும் ஒரே மந்தையில் இணைக்கப்பட்டு நம்முடைய பிரதான மேய்ப்பராகிய இயேசு கிறிஸ்துவின் உபதேச சட்டத்திற்கு கீழ்ப்படிவோமாக. கர்த்தருடைய கிருபை உங்களோடிருப்பதாக! ஆமென்.

## பேசும் வேதாகமம் : 5

1. கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; எதுவே காரியம்? – புது சிருஷ்டியே காரியம் – கலா.6:15.
2. சபையிலே யார் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாக வேண்டும்? – கிறிஸ்துஇயேசுவின் மூலமாய் – எபே.3:21
3. தேவகிருபையைச் சத்தியத்தின்படி அறிந்து கொண்ட நாள்முதல், அது உங்களுக்குள்ளும் என்ன செய்கிறதாயிருக்கிறது? – பலன் தருகிறதாயிருக்கிறது – கொலோ.1:6.
4. அசட்டை பண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின எவரையே அசட்டைபண்ணுகிறான்? – தேவனையே – 1தெச.4:8
5. ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் என்ன செய்யப்படான்? – முடி சூட்டப்படான் – 2தீமோ.2:5.
6. கர்த்தர் நம்மை எப்படி இரட்சித்தார்? – மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் – தீத்.3:5.
7. அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து என்ன செய்வான்? – ஓய்ந்திருப்பான் – எபி.4:10.
8. உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி எப்படியிருக்கும்? – வீணாயிருக்கும் – யாக்.1:26
9. உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் எப்படிப்பட்டவர்களாயிருக்க வேண்டும்? – பரிசுத்தராய் – 1பேது.1:15.
10. நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், எது நமக்குள் இராது? – சத்தியம் – 1யோவா.1:8.

# சந்திப்போம்! சிந்திப்போம்!

**உரையாடல் - 32** **D.எபிநேசர்**

**தாவீது:** என்ன யோனத்தான்! ஆண்டவர் சொல்லித்தந்த மாதிரி கரெக்டா ஜெபம் பண்றயா?

**யோனத்தான்:** ஆமா தாவீது. சரியா இருக்கா பாரு! பிதாவை நோக்கி ஜெபம் பண்றேன்(மத்.6:6,9). அவருடைய நாமத்தை மகிமைப் படுத்தறேன்(சங்.96:7). அவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நன்றி செலுத்தறேன்(சங்.103:2). என் தேவைகளை சுருக்கமா கேக்கறேன்(பிர.5:2; மத்.6:8). கடைசியா, இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே அல்லது மூலமாக என்று சொல்லி முடிக்கிறேன்(யோவா.16:23,26).

**தாவீது:** ரொம்ப கரெக்ட் யோனத்தான். அடைப்புக் குறிக்குள் போட்டிருக்கற வசனத்தை அழுத்தமா படிச்சுக்க. அப்புறம், வெறும் சுயநலமா நமக்காக மட்டும் ஜெபம் பண்ணிட்டிருக்கக் கூடாது. மத்த விஷயங்களுக்காகவும் நாம ஜெபம் பண்ணனும்.

**யோனத்தான்:** மத்த விஷயங்களா! அது என்னப்பா?

**தாவீது:** ஒவ்வொன்னா சொல்றேன் கேட்டுக்க. சபைக்காகவும், ஊழியருக்காகவும், ஊழியத்திற்காகவும், ஆத்தும ஆதாயப் பணிகளுக்காகவும் ஜெபம் பண்ணனும்(கொலோ.4:2-4).

**யோனத்தான்:** சரி. அப்புறம்?

**தாவீது:** நம் நாட்டுக்காகவும், நாட்டை ஆளுகிற அதிபதிகளுக்காகவும், அதிகாரிகளுக்காகவும் ஜெபம் பண்ணனும்(1தீமோ.2:2).

**யோனத்தான்:** ஆமாமா!அப்பத்தானே நாம நிம்மதியா இந்த நாட்டுல குடியிருக்க முடியும். அப்புறம்?

**தாவீது:** நல்ல மழைக்காக, நம் நண்பர்களுக்காக, உறவினர்களுக்காக, அவர்களின் தேவைகள் மற்றும் மனந்திரும்புதலுக்காக, இப்படி பெரும்பாலும் மற்றவர்களுக்காக அதிகமா ஜெபம் பண்ணனும்(1தீமோ.2:1,3,4).

**யோனத்தான்:** ஏம்பா, சுருக்கமா பண்ணனும்னு சொல்றே பிறகு இவ்வளவு பேருக்குப் பண்ணும்போது நேரம் ஆகாதா?


**தாவீது:** இடம் பொருள் ஏவல் தெரிஞ்சுதானப்பா பண்ணனும். தனிப்பட்ட ஜெபத்துக்கு நீ எவ்வளவு நேரம் வேணுமானாலும் எடுத்துக்கலாம். ஆனா, சபையிலோ, மற்றவர்கள் முன்பு ஜெபம் பண்ணும்போதோ, அந்தந்த சூழ்நிலைகளுக்குத் தகுந்தமாதிரி சுருக்கமா ஜெபம் பண்ணனும்.

**யோனத்தான்:** ஏன்? எல்லாரும் தூங்கிடுவாங்களா?

**தாவீது:** தூங்குகிறதுமட்டுமா! அடுத்த தடவ உன்னை ஜெபம் பண்ணவே கூப்பிட மாட்டாங்க. **(மீண்டும் சந்திப்போம்)**

**சிறுவர் பகுதி**

# அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்



***வேத பகுதி: யோவான்3:30-33***

அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் என்று சொன்னது யார் தெரியுமா? சொல்லுங்க பார்க்கலாம். மோசே. இல்லை. அது புதிய ஏற்பாட்டு புஸ்தகத்தில் உள்ள ஒரு நபர். ஆ..... எனக்கு தெரியும். எங்கே சொல்லு பார்க்கலாம், யோவான்ஸ்நானகன். மிகவும் சரியாய் சொன்னாய். அவன்தான் இப்படி இயேசுவைக் குறித்து சொன்னான். இன்றைக்கு அனேகர் நாம டெவலப் ஆனா போதும் என்று சொல்லுவாங்க இல்லையா, ஆனா யோவான்ஸ்நானகன் அப்படியல்ல! நான் அவருடைய பாதரட்சையின் வாரைக்கூட அவிழ்க்கிறதற்கு பாத்திரனல்ல என்று தாழ்த்தி அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் என்றான்.

ஏனென்றால் பூமியிலிருந்து உண்டானவன் பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான். இயேசுவோ பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர். நாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாகச் சொல்லுகிறார். அவருடைய சாட்சியை ஏற்றுக் கொள்ளுகிறவன் தேவன் சத்தியமுள்ளவரென்று முத்திரைபோட்டு நிச்சயப்படுத்துகிறான். நீங்கள் அவருடைய வசனங்களை புதிய ஏற்பாட்டு புஸ்தகத்தில் உள்ள நான்கு சுவிசேஷங்களிலும் வாசிக்கலாம். வாசித்து அவரை உங்கள் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக் கொண்டு உங்களுடைய மனதில் முத்திரை போட்டு நிச்சயப்படுத்திக் கொள்வீர்களா? ஓ அப்படியே செய்வோம். மிக நல்ல பிள்ளைகள். உங்களைத்தான் அவர் ரொம்பவும் நேசிக்கிறார்.

நாமும் யோவான்ஸ்நானகன் சொல்வதைப்போல சொல்வோமா? ஓ சொல்வோமே. **அவர் பெருகவும் நாம் சிறுகவும் வேண்டும்**. சரி, தம்பி தங்கைகளா, மீண்டும் அடுத்த மாதம் சிறுவர் பகுதியில் உங்களை சந்திக்கிறேன். ஒவ்வொரு மாதமும் சொல்லுகிற மனப்பாட வசனத்தை படிக்க மறந்திடாதீங்க!

**மனப்பாட வசனம்:**

"குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" (யோவான்3:36)

# வேத அறிவுப் போட்டி எண்.56

*போட்டியாளர்கள் கவனத்திற்கு.*

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25-தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும்.*

1. ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்று யார் யாரைப் பார்த்து சொல்வது?
2. கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களை என்ன செய்யமாட்டாது?
3. சூரியன் உதிக்கிற திசை தொடங்கி, அது அஸ்தமிக்கிற திசைவரைக்கும், என் நாமம் ஜாதிகளுக்குள்ளே எப்படி இருக்கும்?
4. வேதப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவன் எப்படிப்பட்ட புத்திரன்?
5. நீர் சர்வவல்லவரிடத்தில் மனந்திரும்பினால், திரும்பக் கட்டப்படுவீர் என்று யார் யாரைப் பார்த்து சொல்வது?
6. நிலத்துக்கு எருவாய்ப் போனவர்கள் யார்?
7. எங்களுடைய தகுதி யாரால் உண்டாயிருக்கிறது என்று பவுல் எழுதுகிறான்?
8. கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் எதை விட்டு விலகக் கடவனென்பதும், அதற்கு முத்திரையாயிருக்கிறது?
9. உம்முடைய விசுவாசத்தின் அந்நியோந்நியம், யாருக்காகப் பயன்பட வேண்டுமென்று வேண்டுதல் செய்கிறேன் என்று யார் யாருக்கு எழுதுவது?
10. பொறுமையாய்க் காத்திருந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றவன் யார்?

## நடப்புச் செய்திகள்

- இந்தோனேஷியா, அந்தமான் போன்ற இடங்களில் மீண்டும் மீண்டும் நிலநடுக்கம் தொடர்ந்து ஏற்பட்டுவருகிறது.
- 338 .இந்திய பொருள்களுக்கு அமெரிக்கா அரசு காப்புரிமை அளித்துவருகிறது.
- நடப்பு நிதியாண்டில் பருத்தி உற்பத்தி 20 சதவீதம் கூடுதலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- மிகவேகமாக வளர்ச்சி கண்டு வரும் தனியார் துறை வங்கியான இண்டஸ்இண்ட்பேங்க், நாட்டின் தென் பகுதியில் அதிக அளவில் கிளைகளை திறக்க திட்டமிட்டுள்ளது.
- மியாமி ஓபன்டென்னிஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் இந்திய விராங்கனை சானியா மிர்சா அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.

Owned and published by B.Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202 Editor: **B.Arjunan.**

Registered with Registrar of Newspapers for India under No.TNTAM/2000/3629
Postal Registration. No. TN/SR-164/2003-2005 Lincensed to Post without prepayment
License No.TN/WPP-25/SR/2003-2005 Posted at Batlagundu Post Office on 10th Apr. 2005.



**எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.**

## கிறிஸ்துவின் சபை

**7.2.102-D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு - 624 202**
**திண்டுக்கல் மாவட்டம்.**
**போன்: 04543-263278 செல்: 9443558041**
E-mail:thewordofchrist@sancharnet.in
arjunglory@yahoo.co.in



"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32)

'ஒரே வழி' தபால்வழி வேதபாடதிட்டம்

**The Master Course**

தமிழில்
இருபது வயதிற்கு மேற்பட்டவர்கள்
இன்றே ரூ.30/ - செலுத்தி
இப்பாடத்திட்டத்தில் சேர்ந்து ஒரு வருடத்தில் முடித்து
Certificate பெற்றுக்கொள்ளுங்கள்



**THE ONE WAY**
**BATLAGUNDU BIBLE COLLEGE**
P.O. Box 5, BATLAGUNDU - 624 202
S.INDIA

## தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

மாத இதழின் ஆண்டு சந்தா
இந்தியா -ரூ.50/-
வெளிநாடு - ரூ.500/-
தனிப் பிரதி - ரூ.5/-

**Monthly Magazine**

**To**

**From**

Editor
THE WORD OF CHRIST
P.O.Box 5
Batlagundu - 624 202
S. India